NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 23 January 2019

# கால்களின் தசை வலுவடைய காந்தப்புல சிகிச்சை

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், காந்தப்புலம் மூலம் தசைகளை வலுவடையச் செய்யும் புதிய சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

‘எம்ரீகன்’ என்பது சாதனத்தின் பெயர். உடற்பயிற்சியின்போது உயிரணுக்களில் ஏற்படும் வளர்சிதை மாற்றத்தைப் போன்றே காந்தப்புலம் மூலம் உயிரணுக்கள் தூண்டப்பட்டு தசை வலுவடையச் செய்யப்படுகிறது.

இதனால் ஒருவரின் கால்களில் உள்ள தசைகளை வலுவாக்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இணைப் பேராசிரியர் அல்ஃபிரடோ ஃபிராங்கோ-ஒப்ரிகன் தலைமையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் உலகளாவிய மருத்துவ ஆய்வு, தொழில்நுட்ப உயிர்மருத்துவ கழகம், யோங் லூ லின் மருத்துவ பள்ளியின் அறுவை சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் 12 ஆய்வாளர்கள் 2015, 2017க்கு இடையே காந்தப் புலத்தைப் பயன்படுத்தி இரண்டு மருத்துவ சோதனைகளை மேற்கொண்டனர். இதன் ஒரு பகுதியாக பத்து ஆரோக்கியமான தொண்டூழியர்களுக்கு ஐந்து வாரங்களுக்கு ஒரு வாரம் ஒவ்வொரு காலிலும் பத்து நிமிட காந்தப்புல சிகிச்சை அளிக்கப்பட்டது. சோதனையின் முடிவில் இரு கால்களின் தசைகள் 30 முதல் 40 விழுக்காடு வலுவடைந்தது தெரிய வந்தது என்று பேராசிரியர் ஃபிராங்கோ-ஒப்ரிகன் தெரிவித்தார்.

2வது சோதனையில் இருபது நோயாளிகள் பங்கேற்றனர்.

இவர்கள் அனைவரும் தசை நார் மூட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள். இவர்களில் பாதிப்பேருக்கு வழக்கமான உடற்பயிற்சி சிகிச்சைகளுடன் காந்தப்புல சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

“காந்தப்புல சிகிச்சை பெற்ற ஒவ்வொருவருக்கும் எலும்பின் அடர்த்தி கூடியிருந்தது. தசை வலுவடைந்தது,” என்று பேராசிரியர் கூறினார்.

தற்போது இந்த ஆய்வுக் குழுவினர் தங்களுடைய கண்டுபிடிப்புக்கு காப்புரிமையை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக ‘குவான்டம்டிஎக்ஸ்’ எனும் நிறுவனத்தையும் அவர்கள் ஆரம்பித்துள்ளனர். புதிய சாதனம் விரைவில் விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




எம்ரீகன் காந்தப்புல இயந்திரம் செயல்படும் விதத்தை இணைப் பேராசிரியர் அல்ஃபிரடோ ஃபிராங்கோவும் ஆய்வு உதவியாளர் ஷரண்யா ரமணனும் விளக்குகின்றனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.